The Industrial Labour Welfare Association Ltd.,
COIMBATORE.

Welcome speech by

Sri T. S. AVINASHILINGAM CHETTIAR,
B. A., B. L.,

Founder, Sri Ramakrishna Mission Vidyalaya.

and

Speeches by

Srimathi THULAJA RAMA RAO,

Sri G. K. DEVARAJULU NAIDU,
Managing Director, Lakshmi Mills,

and

Sri K. HANUMANTHAIYA, M. P.
former Chief Minister, Government of Mysore.

at

GURU PUJA

SRI RAMAKRISHNA MISSION VIDYALAYA,

Periyanaickenpalayam,

on **1—1—1967.**

The Industrial Labour Welfare Association Ltd.,
COIMBATORE.

Welcome speech by

Sri T. S. AVINASHILINGAM CHETTIAR,
B. A., B. L.,
Founder, Sri Ramakrishna Mission Vidyalaya.

and

Speeches by

Srimathi THULAJA RAMA RAO,

Sri G. K. DEVARAJULU NAIDU,
Managing Director, Lakshmi Mills,

and

Sri K. HANUMANTHAIYA, M. P.
former Chief Minister, Government of Mysore.

at

GURU PUJA

SRI RAMAKRISHNA MISSION VIDYALAYA,

Periyanaickenpalayam,

on **1—1—1967**.

Guru Puja at

Sri Ramakrishna Vidhyalaya on 1—1—1967.

Speech by

Sri Avanasilingam Chettiar

இன்றைக்கு காலைக் கூட்டம் ஆரம்பம் ஆகிறது. கண்காட்சி ஆண்டு தோறும் வித்யாலயத்தில் குரு தேவர் பிறந்த தினத்தை ஒட்டி வைக்கப்படுகிறது. ஆண்டு தோறும் குரு தேவர் விழா ஜனவரி முதல் வாரத்தில் ஞாயிற்றுக் கிழமையிலே வைப்பது வழக்கம். இன்றைக்கு 1-ம் தேதியன்றே வந்திருக்கிறது. ஆதலால் முதலிலேயே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் சொல்ல வேண்டும் ஆண்டவன் பெயரை நினைத்து ஆண்டவனை நினைத்து இந்த ஆண்டு ஆரம்பிக்க போகிறோம். இந்த நாடு சுபிக்ஷமாக வாழ்ந்து நம்முடைய குறைகள் தீர்ந்து நீங்கள் எல்லோரும் தேசம் முழுவதும் நன்றாக இருக்க வேண்டும் என்று முதலிலேயே வாழ்த்துச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

இந்தக் காலைக் கூட்டத்திலே கண்காட்சி திறப்பு விழாவிற்கு ஸ்ரீ ஹனுமந்தையா அவர்கள் வந்திருக்கிறார்கள் அவர்களைப்பற்றி நீங்கள் தெரிந்திருப்பீர்கள். நமக்குப் பக்கத்திலே இருக்கும் மைசூர் ராஜ்ஜியத்திலே பிரதான மந்திரியாக Chief Minister ஆக தலைமை மந்திரியாக பணியாற்றி வந்திருக்கிறார். இப்பொழுது பார்லிமெண்டில் இருக்கிறார். அவர் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கிற மாதிரி, இந்தியாவிலேயே ஒரு பெரிய அமைப்பு கட்டிடம், "விதான் சபா" அசம்பிளிக்காகக் கட்டியிருக்கிறார்

கள். அவரைப் பலபேர் அதைக் கட்டியதற்காக, பொருள் சிலவாகிவிட்டது என்று குறை சொன்னார் கள். ஆனால் சாசுவதமாக அவர் பெயரும் எப் பொழுதும் மைசூரின் பெருமையும் அந்தக் கட்டிடத்தை ஒட்டி இருக்கும்.

அவர் நாட்டிற்குப் பலமுறையிலே சேவை செய்து இருக்கிறார். அவர் நமக்கு வந்ததே, இந்த விழாவிற்கு வந்ததே மிகமிக மகிழ்ச்சிகரமான விஷயம். இரண்டு வாரத்துக்கு முன் நமது அறிஞர் ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்கள் ஏற்பாடு செய்திருந்த மகா நாட்டுக்கு வந்திருந்தார், அப்பொழுதுதான் கேட்டுக்கொண்டோம். அவர் வந்திருப்பது நம் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி. அவர் வந்ததோடு அல்லாமல், அவர் குடும்பத்தாரோடு அனைவரும் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு, அவர்கள் வந்த தற்கு நன்றியைச் செலுத்திக் கொள்ள வேண்டும். குரு மகராஜ் பக்தர்.

தலைமை வகிப்பதற்கு நம் தேவராஜலு நாயுடு வந்திருக்கிறார். ஸ்ரீ தேவராஜ் பரம்பரையாக வித்யா லயத்துக்கு வேண்டியவர்கள். வித்யாலயம் ஆரம் பித்த பொழுது, அவர் தகப்பனார் ஸ்ரீ ஜி. குப்புசாமி நாயுடு அவர்கள் — இப்பொழுது வயதானவர்களுக் கெல்லாம் தெரிந்திருக்கும் அவரைப்பற்றி. சிறுவர் களுக்கெல்லாம் தெரிந்திருக்காது. இப்பொழுது லக்ஷ்மி மில்ஸ் என்று பெரிதாகச் சொல்லுகிறோம். அதற்கு அஸ்திவாரம் எல்லாமே அவர்தான். அந்த லக்ஷ்மி மில்லை ஒட்டித்தான் பக்கத்தில் இருக்கிற மற்றவைகள் எல்லாம் வந்திருக்கின்றன. இந்தக் கோயமுத்தூரிலே, தொழில் வளர்ச்சிக்கு முக்கிய மாக இருந்தவர்களில் அவர் ஒருவர். எனக்கு,

நமக்கு, வித்யாலயத்திற்கு, நெருங்கிய உறவினர் நெருங்கிய அன்பு இருந்தவர். ஆதலால்தான் சொல்லுகிறேன், அவர் பரம்பரையாக வித்யாலயத்துக்கு வேண்டியவர்.

ஸ்ரீ தேவராஜினு சம்பந்தமாக இன்னொரு மகிழ்ச்சி, நம்முடைய மனிதர் ஒருவர் இந்தியன் காட்டன் மில்ஸ் அசோசியேஷனுக இந்தியாவிலேயே அந்தத் துறையிலே ஒரு பெரும் பதவி வகித்து, நல்ல பேர் வாங்குவது நம் அனைவருக்கும் மிக மிக மகிழ்ச்சிகரமான விஷயம். பணம் சம்பாதிப்பது பெரிதல்ல எல்லோரும் – பல பேர்கள் சம்பாதிக்கிறார்கள். அதை நல்ல விதத்தில் செலவு செய்யத் தெரிவதுதான் மிகவும் முக்கியமான விஷயம். ஆகையினுலே அவர் நமக்குப் பரம்பரை சொந்தக்காரர். அது மாத்திரம் அல்ல, சிலபேர் அவர்கள் மாத்திரம் சொந்தக்காரர்களாக இருப்பார்கள், அவர்கள் வீட்டிலே நமக்குத் தெரியாமல் இருக்கும். ஆனல் தாயாரம்மாள் அவர்கள் எனக்கு ரொம்ப சொந்தக்காரர் மாதிரி. ஹோலி மதர் செண்டினரி, – ஸ்ரீ சாரதா தேவி அவர்களுடைய நூற்றுண்டு விழா நடத்திய பொழுது அவர்களும் ஸ்ரீமதி ருக்மணி அம்மாளும், ஸ்ரீமதி ராமகிருஷ்ணன் அவர்களும் இருந்துதான் ரொம்ப சிறப்பாக நடத்திஞர்கள். இந்த மேடையிலே யிருந்து வரவேற்புப் பிரசங்கங்கள் செய்தார்கள் அவர்கள் எல்லாம் இருந்து. ஆகையினுல் அவர்கள் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்க வந்திருப்பதே நமக்கு ரொம்ப மகிழ்ச்சிகரமான விஷயம்.

கொடி ஏற்றினுர்கள் காலையிலே ஸ்ரீமதி துளஜா ராமராவ் அவர்கள். இவர்கள் எல்லாம் பணத்திலே

ராஜீயத்திலே பெரியவர்கள். ஆனல் துளஜாராம ராவ் ஆராய்ச்சியிலே, அறிவிலே — இந்தியாவிலே ஏதாவது ஒரு ஸ்தாபனம் உலகிற்கு நன்மை பண்ணி யிருக்கிறது என்று உலகத்தார் ஒப்புக்கொள்ளுகிருர் கள் என்ருல் அது நமது Sugar cane institute, Sugar cane ஆராய்ச்சி நிலையம். சர் டி. எஸ். வெங்கட்ட ராமன் என்று உங்களுக்கெல்லாம் தெரிந் திருக்கலாம், தெரியாமலும் இருக்கலாம். ரொம்ப எளிமையான சுபாவம், குழந்தைமாதிரி அவர். அவர் காலத்திலே பெற்ற பெயர் பெரிய பெயர் இந்தியா முழுவதும். வெளி நாட்டிலே ஒரு தடவை பிஷாவருக்குப் போய் இருநதேன், அது பிரிவினைக்கு முன் என்று சொல்ல வேண்டியதில்லை — அப்துல்கபர் கான் இருந்தார் — கூட்டிக் கொண்டு போய்க் காண் பித்தார். கொண்டுபோய்க் காண்பிக்கிறேன் - பாருங் கள் நல்ல பண்ணயம் என்று கொண்டுபோய்க் காண்பித்தார். அங்கு கரும்பு அழகாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இது என்ன கரும்பு தெரியுமா C. O. என்று சொல்லி ஒரு நம்பர் சொன்னுர். இது முன்னேற்றமாகப் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட கரும்பு என்று சொன்னுர். நான் உடனே அவரைத் திருப்பிக் கேட்டேன், C. O. என்ருல் என்ன தெரி யுமா என்று கேட்டேன். அவர் என்ன என்று கேட்டார், நான்தான் என்று சொன்னேன். கோயமுத்தூர் என்று சொன்னேன். ஆகையினுலே ஹனலூலூவிற்கு அமெரிக்காவிலே கூட C. O. கரும்பு இருக்கின்றன. ஆகையினுலே, இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு மகத்தான ஆராய்ச்சி நிலையத் திற்கு தலைமை தாங்கியிருப்பவர்கள் நமது துளஜா ராமராவ் அவர்கள். அவர்கள் பத்தினி அவர்கள் நிறைந்த பக்தியுள்ளவர்கள். நமது மனையியல் கல்லூரியில், குழந்தையிடத்திலே நிறைந்த

அன்புள்ளவர்கள். நல்ல பண்பாடு உள்ளவர்கள். அவர்கள் வந்து – நல்ல தாய்மாராய் ஒருவர் வந்து கொடியேற்று விழா நடத்திக் கொடுத்தது நம் அனை வருக்கும் மிகுந்த மகிழ்ச்சி. மாலை நிகழ்ச்சிகளைப் பற்றி நான் சொல்ல வேண்டாம். ராயசொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் வந்திருக்கிறார்கள். ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். வந்து கோயமுத்தூரில் இருக்கிறார்கள் இதற்குள் வந்திருக்க வேண்டும். பித்துக்குளி முருகதாஸ் அவர்களும் வரவேண்டும் உடனே. ஆகையினாலே இந்த அழகான முதல் தேதியிலே நடக்கும் இந்த அருள் விருந்துக்கு நீங்கள் எல்லோரும் வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி. இப்பொழுது காலை நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பெரியோர்களே,

இப்பொழுது காலையிலே கொடியேற்றி வைத்து கொடுத்த திருமதி துளசிராஜாராம ராவ் அம்மை அவர்கள் தம்முடைய கொடியேற்று விழா பிரசங்கத்தை நிகழ்த்துவார்கள். அதன் பிற்பாடு தலைவர் அவர்களுடைய பேச்சும், பொருட்காட்சி திறப்பாளருடைய பேச்சும் இருக்கும்.

திருமதி துளஜாராம ராவ் அவர்கள்
சொற்பொழிவு.

பெரியோர்களே, சகோதர சகோதரிகளே,

இன்றைய புண்ணிய தினமான, திரு. ராம கிருஷ்ண பரமஹம்சர் அவர்களின் பிறந்த தினமான இன்றைக்கு என்னைக் கொடியேற்று விழாவிற்கு அழைத்ததற்கு என் சார்பாகவும், என் கணவரின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம் நாட்டில் எத்தனையோ மகான்கள் எல்லாம் தோன்றி இருக்கிறார்கள். அதில் சிலபேர் ப்ரம்மசாரிகளாகவே பகவானுக்குத் தொண்டு செய்திருக்கிறார்கள். அதாவது சங்கராச்சாரியார் இந்த மாதிரி பெரியவர்கள் எல்லாம், இன்னும் சில பேர் கல்யாணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமுமாக இருந்து கொண்டு பகவானுக்கு தொண்டு செய்திருக்கிறார்கள். துக்காராம், சக்குபாய் இப்படி சில பேர்கள்.

ஆனால் திரு ராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்களுடைய சரிதமே தனி. அவர் கல்யாணம் ஆனவர். ஸ்ரீ சாரதாமணி அவருடைய மனைவி ஆனாலும் கல்யாண தினத்தன்று அவர் தன் மனைவியை தேவியாகவும், தனக்கு குருவாகவும் மதித்து வாழ் நாள் முழுவதும் அப்படியே வாழ்ந்து காண்பித்தார். இது நமது சரிதத்தில், நம் இந்தியாவில் அவர் ஒருவரே தான் அப்படிப் பட்டவர் என்று எனக்குத் தோன்றுகிறது. அப்டிப்பட்ட மகான் தேவியின் ஸ்வரூப

மாகவே மனைவியை மதித்து வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து வந்தவர். அதுவும் காளி — மகாகாளி தேவியை நேரிலேயே பார்த்தவர் என்றும் சொல்லப் படுகிறது. கல்கத்தாவில் பேலூர்மட் என்னும் இடத் தில் அவருடைய கோவில் இருக்கிறது. அந்த இடத் தில் அவர் உட்கார்ந்து கொண்டு எப்பொழுதும் தேவியைப் பற்றியே யோசனை செய்வது, தேவியை உபாசனை செய்வது இது மாதிரியே செய்து கொண்டு இருந்தவர். இன்றைக்கும் நீங்கள் அங்கே போனால் அந்த மரத்தைக் காணலாம். அந்த மரத்தின் நாலா பக்கமும் சிமெண்டினால் நாலாப் பக்கமும் திண்ணை மாதிரி போட்டிருக்கிறார்கள். அங்கே செல்பவர்கள் எல்லாம் புஷ்பாஞ்சலிசெய்து அவருக்கு வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு வரலாம். கடவுள் தயவால், பெரியார்களின் ஆசியால் இங்கு வந்திருக்கும் எல்லோ ரும் ஒருதரம் கல்கத்தாவிற்குச் சென்று, அந்த மகானின் சமாதியைப் பார்த்து, மகிழ்ந்து வரும்படி பகவான் உங்கள் எல்லோருக்கும் அருள் புரிய வேண்டும். எனக்கும் அருள் புரியவேண்டும் திரும்ப வும் நான் போய்வரும்படி என்று நான் கேட்டுக்கொள் ளுகிறேன். உங்கள் எல்லோருக்கும் எனது மன மார்ந்த நன்றியைத் திரும்பவும் தெரிவித்துக் கொள் ளுகிறேன். வணக்கம். (கரகோஷம்).

ஸ்ரீ ஜி. கே. தேவராஜுலு நாயுடு அவர்கள்

சொற்பொழிவு.

ஸ்ரீ ஹனுமந்தையா அவர்களே, மதிப்பிற்குறிய
ஸ்ரீ அவனுசிலிங்கம் செட்டியார் அவர்களே,
பெரியோர்களே, தாய்மார்களே,

இன்று இந்த குரு பூஜை விழாவில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கொடுத்ததற்கும், என்னையும், என் குடும்பத்தாரையும் பெருமைப் படுத்தி அறிமுகப் படுத்தியதற்காகவும் ஸ்ரீ செட்டியார் அவர்களுக்கு எனது நன்றி. இந்த சந்தர்பத்தினல் நானும் இந்த குரு பூஜை விழாவில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்ததற்கும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒவ்வொரு நாளும் இவ்வழியாகப் போகும் பொழுதும் இந்த வித்தியாலயத்தின் வாயிலைப் பார்க்கும் பொழுதெல்லாம் பெருமைப் படுவதுண்டு. இதன் விருத்தியை ஆரம்பம் முதற்கொண்டு, தொடர்ந்து பார்த்து வரும் பாக்கியம் எனக்கு இருந்தது. பல ஆண்டுகளாக நான் செட்டியாருடன் நெருங்கி பழகி வந்திருக்கிறேன். அவருடைய விடா முயற்சியினுலும், குருநாதரின் அருளினுலும் இந்த வித்தியாலயம் இவ்வளவு பெரும் நிலைமை அடைந்தது. மற்றும் மிகவும் மகிழ்சியான செய்தியைக் கேள்விப்பட்டு, அதாவது இந்த வித்தியாலயம் சமீப காலத்தில் சர்வகலாசாலையாக உருவாக்கப் படுகிறது என்று கேள்விப்பட்டு எனக்கு மிக மிக

மகிழ்சி. நமது கோயமுத்தூருக்கு சர்வகலாசாலே வேண்டும் என்று பல ஆண்டுகளாக அநேகம்பேர்கள் முயற்சி எடுத்து வருகிறார்கள் — அது இன்னும் முடியவில்லே. திரு. செட்டியாரின் தனிப்பட்ட முயற்சியினால் இங்கு முதன்முதலாக சர்வகலாசாலே வருவது எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சி.

இன்று எனக்குத் தொழில் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கும் வாய்ப்பை செட்டியார் அவர்கள் அளித்திருக்கிறார்கள். சற்று முன்பு அதைப் போய்ப் பார்த்து வந்தோம். இந்த சமயத்தில் வெளிதேசத்தில் நடந்த ஒரு சந்தர்ப்பத்தை அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

ஜெர்மனி நாடானது சுமார் 50, 60 வருஷங்களுக்கு முன் இப்பொழுது இருப்பது போல் அவ்வளவு விருத்தியாக இருக்கவில்லே என்றால் நீங்கள் அநேகமாக நம்ப மாட்டீர்கள். இதுதான் உண்மை. அப்பொழுது அங்கிருந்த பெரியவரான பிஸ்மாக் என்பவர் வெளி நாடுகளிலிருந்து, யந்திரங்களேயும் பொருள் காட்சிகளேயும் கொண்டுவந்து பெரிய பெரிய நகரங்களில் பொருள் காட்சியாக வைத்தது மல்லாமல், அங்கிருந்த ஜனங்களே கட்டாயப் படுத்தி அதைப் போய்ப் பார்க்கும்படியாக ஏற்பாடு செய்தார். அதன் விளேவு இன்று ஜெர்மணி இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பது உங்களுக்கு எல்லோருக்கும் தெரியும்.

அதேமாதிரியாக இந்த வித்தியாலயத்தினுடைய பொருள்காட்சியும் ஜனங்களுக்கு உற்சாகமூட்டும் வகைகளாக இருக்கின்றது. நான் வேண்டிக் கொள்வது செட்டியார் அவர்களே, இந்தப் பொருள் காட்சி

எப்பொழுதும் நிரந்தரமாக இருந்து எல்லா ஜனங்களுக்கும், எல்லா காலேஜ் மாணவர்களுக்கும் ஒரு நிலை காட்டியாக இருந்து இது தேசத்துக்கும் சமூகத்திற்கும் முக்கியமான ஒன்ருக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்த ஸ்ரீ செட்டியார் அவர்களுக்கும், உங்கள் எல்லோருக்கும் எனது நன்றி. (கரகோஷம்).

Speech by

Sri K. Hanumanthaiya, M.P,

How many people understand English? Please lift your hands. Oh! quite a number. Nevertheless we have made arrangements that I speak in English, sentence by sentence there will be word by word translation by my friend on the right side. It is a great pity that I do not know Tamil language.

இப்பொழுது நான் பேசுவதை மொழி பெயர்க்க ஏற்பாடாகி இருக்கிறது. எனக்குத் தமிழ் தெரியாததைப்பற்றி நான் வருத்தப்படுகின்றேன். கடையில் போய் சாமான் வாங்குகிற அளவுக்கு எனக்குத் தமிழ் தெரியும். ஆனால் இம்மாதிரி ஒரு அவையில் பேசக்கூடிய மொழி அல்ல அது. இது இந்தியாவில் இருக்கக்கூடிய ஒரு பிரச்னை.

நான் இப்பொழுது பொருட்காட்சியைத் திறந்துவைத்த ஸ்ரீ தேவராஜுலு அவர்களிடம் சொல்லிக்கொண்டு இருந்தேன். நான் இங்கு இந்தியாவில் பல மாகாணங்களில் இருப்பதை விட வெளி நாட்டிலே கனடாவுக்குப் போயிருந்தபொழுது இன்றும் வீட்டில் இருப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. கனடாவிலே காமன்வெல்த்து பார்லிமெண்டரி கான்பிரன்ஸுக்காக நான் போயிருந்தேன். 27 நாடுகளின் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

எல்லோருக்கும் ஆங்கிலம் நன்ருகத் தெரிந்திருந்தது. ஆகவே நாங்கள் ஒருவர்க்கொருவர் பிரியமாகவும், நம்பிக்கையோடும் பேசி ஒருவர்க்கு ஒருவர் கருத்துப் பரிமாற முடிந்தது. இந்தியாவிலே அது நடப்ப தில்லை. நான் சென்னை சட்டசபையில் உட்கார்ந்தால் அங்கு நடக்கும் நடவடிக்கைகளை நான் தொடர்ந்து புரிந்துகொள்ள முடியாது. சென்னை சட்டசபை அங்கத்தினர் மைசூர் சட்டசபையில் உட்கார்ந்தால், அங்கு நடக்கும் நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ள முடியாது. சென்னை, மைசூர் சட்டசபை அங்கத் தினர்கள் பஞ்சாபுக்குச் சென்று அந்த சட்டசபை யில் உட்கார்ந்தால் அங்கு நடப்பது ஒன்றுமே புரியாது அவர்களுக்கு. இந்த 14 மொழிகளும் சுதந்திரமாக முழு உரிமையுடனே இப்பொழுது நடைமுறையில் இருக்கின்றன. அதன் காரணமாக பல நன்மைகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனல் ஒருவர்க்கொருவர் புரிந்துகொள்வதற்கும் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டிருக்கின்றன. சில பேர் இந்த மொழிகளை மிகப் பெரிதாகச் சொல்லுகிருர் கள். 14 ராஜியங்களையும் 14 தனித்தனி நாடுகள் போல நினைத்துக்கொண்டு பெரிதாகச் சொல்லுகிருர் கள். நாம் அவைகளை அவைகளின் யதார்த்த ஸ்தானத்திலிருந்து பார்க்கவேண்டும்.

இன்று நாம் வங்காள மாகாணத்தில் பிறந்து, வங்காளி மொழியைத் தவிர வேறு மொழி தெரியாத ஒருவரை வணங்குவதற்காக, போற்றுவதற்காகக் கூடியிருக்கிறேம். நீங்கள் நம் நாட்டிலே இருந்த பெரிய முனிவர்கள், சாதுக்கள், ரிஷிகள் ஆகிய இவர்களின் கருத்துக்களை எல்லாம், உபதேசங்களை எல்லாம் எடுத்துப் பார்த்தீர்கள் என்று சொன்னல், பல மொழிகளிலே அவர்கள் பேசியிருந்தாலும் கூட

கருத்துக்கள் ஒன்றுக இருக்கின்றன. ஆகையினுலே இந்தியாவிலே ஒரு மொழியும் இல்லையென்று ஜனங்கள் சொல்லும்பொழுது அதைக் கேட்டு நாம் பயப்படக்கூடாது. தொன்றுதொட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த மொழிகள் இருந்திருக்கின்றன. இருந்தாலும் கூட நாம் ஒரே பண்பாடு, நாகரிகம் நம் நாட்டிலே வளர்த்திருக்கின்ருேம். அதைப் பேணி இருக்கின்ருேம். சிலபேர் நாட்டில் ஒரே மொழி இருக்கவேண்டும் என்று சொல்லுகிருர்கள். அப்படிச் சொல்லும்பொழுது அவர்களுடைய சவுகரியத்தையோ, தங்களுடைய அரசியல் சவுகரியத்தையோ மட்டும் நினைத்துக்கொள்ளுகிருர்கள். நாம் இப்பொழுது இருக்கிறதுபோலவே இந்த மொழிகளை வைத்துக்கொள்ளலாம். வைத்துக்கொண்டும் கூட இந்தப் பல மொழிகளுக்கிடையே கூட ஒரே கருத்து நிலவுகின்ற மாதிரி ஒருமைப்பாட்டுக்கு நாம் முயற்சிசெய்யவேண்டும்.

நான் ஒரு மாணவனுக இருந்த காலத்திலிருந்தே நான் பகவான் ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் இவர்களுடைய உபதேசங்களைக் கேட்டு நான் பெரிதும் உணர்ச்சிப்பட்டிருக்கின்றேன். நான் மட்டுமல்ல என்னுடைய தலைவர்கள், என்னுடன் வேலை செய்பவர்கள், நண்பர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் நம் நாட்டிலே அவர்களின் உபதேசங்களைக் கேட்டு பெரும் உணர்ச்சியும், உற்சாகமும். ஒரு பெரிய உதாரணம் சொல்லப்போகிறேன். ஸ்ரீ அவனுசிலிங்கம் செட்டியார் அவர்கள், அவர்களுடைய உபதேசங்களைக் கேட்டு உணர்ச்சிபெற்றது மட்டும் அல்ல, நடைமுறையிலே அவைகளை உருவாக்குகின்ற முறையிலே, பெரிய கல்வி ஸ்தாபனங்களாக உருவாக்கி இருக்கிருர். ஒரு

பெரியவருக்கு நன்றி சொல்லுகின்ற முறையிலே, மரியாதை சொல்லுகின்ற முறையிலே யார் சொல்லு கிறார்களோ அவர்கள் நல்லவர்கள். ஆனால் வார்த்தை களால் மட்டும் அல்லாமல் காரியத்தாலும் அவர் களுக்கு நன்றி செலுத்துகிற மாதிரி செய்கின்றவர் கள், அவர்கள் புகழை ஓங்கச் செய்கின்ற மாதிரி செய்கின்றவர்கள் அதைவிடப் பெரியவர்கள். அப்படிப்பட்ட ஒரு பெரியவர் நம்முடைய திரு அவனாசிலிங்கம் செட்டியார் அவர்கள்.

இன்று நான் இங்கே தலைமை வகிக்க ஒத்துக் கொண்டிருக்கின்றேன் என்று சொன்னால், நான் ஏதோ எனக்குப் பெருமை படுத்திக்கொள்வதற்காக, பெருமை ஏற்றுக்கொள்வதற்காக வரவில்லை. ஆனால் அவர்களுக்கு என்னுடைய மரியாதையை செலுத்து வதற்காக வந்திருக்கின்றேன்.

திரு ஜி. டி. நாயுடு அவர்கள் என்னுடைய இன்னொரு முக்கியமான நண்பர். அவர் ஒரு சாதாரண மனிதர் அல்ல. ஆகையினாலே சாதாரண மாக நாம் நினைக்கிற மாதிரி அவர் நினைக்கிறதில்லை. அவர் தன்னுடைய சொந்த முறையில் நினைக்கிறார், அதுதான் ஒரு கெட்டிக்காரருடைய வழி. இந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு அவர் பெரிதும் உதவி யிருக்கிறார் என்பதைக் கேட்க நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்காக, தானே கண்டுபிடித்த, தானே உற்பத்தி செய்த பல இயந்திரங்களைக் கொடுத்திருக் கிறார். ஸ்ரீ அவனாசிலிங்கம் செட்டியார் போன்று பகவான் ராமகிருஷ்ணரிடம் பக்தியும் தன்னுடைய வாழ்க்கையை இதற்கே அர்ப்பணம் செய்த ஒரு பெரியவர் ஆரம்பித்து நடத்துகின்ற சமயத்திலே,

அதே சமயத்திலே ஸ்ரீ ஜி. டி. நாயுடு போன்ற ஒரு கெட்டிக்காரர் உதவி செய்கின்ற சமயத்திலே, நிச்சயமாக இது மாதிரி ஒரு ஸ்தாபனம் மிகச் சிறந்து விளங்கும்.

இந்த விழாவை நீங்கள் பிரார்த்தனையோடு ஆரம்பித்திருக்கிறீர்கள். இது ஒரு மிக நல்ல ஆரம்பம். நீங்கள் கோயிலுக்கோ, அல்லது ஒரு புனிதமான இடத்திற்கோ போகவேண்டும் என்று சொன்னால், முதலில் நாம் குளித்துக்கொள்கிறோம். அது உடம்மை சுத்தம் செய்கிறது. அதைவிட முக்கியம் மனதை சுத்தப்படுத்துவது. அதற்கு என்ன வழி? பிரார்த்தனைதான். பஜனை என்பது திருவேணிசங்கமத்தில் ஸ்நானம் செய்வதுபோல, அந்தப் பிரார்த்தனையை இங்கு கூட்டோடு இருந்து பக்தியுடனும் பிரியத்துடனும் நீங்கள் செய்திருக் கிறீர்கள். அந்தப் பிரார்த்தனையை நீங்கள் மிகப் புனிதமான நாளில் செய்திருக்கிறீர்கள். பகவான் ராமகிருஷ்ணருடைய பிறந்தநாளைக் கொண்டாடு கின்ற இன்று. அதனாலே எனக்கு திடமான நம்பிக்கை இருக்கின்றது. இந்த பஜனை நம் எல்லோ ருடைய மனத்திலும் இருக்கின்ற அழுக்குகளை, அசுத்தங்களைப் போக்கி நம்மைப் புனிதப்படுத்தும் என்று. நம்முடைய உடம்பிலே ஒவ்வொரு நாளும் அழுக்கு சேருவதுபோல, நம்முடைய மனதிலேயும் அழுக்கு சேர்ந்துகொண்டே இருக்கும். ஆகை யினாலே தினசரி பிரார்த்தனை செய்வது, தினசரி குளிப்பது எத்தனை அவசியமோ, உடம்மை சுத்த மாக்குவதற்கு, அந்த மாதிரி மனதை சுத்தமாக்கு வதற்கு தினசரி பிரார்த்தனை அவசியம். இந்தத் தூய்மைப் படுத்துகிறது படிப்படியாகப் போய்க் கொண்டேயிருக்கிறது. உடம்பை சுத்தப்படுத்து

கிறது என்றால் என்ன என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் மனதை சுத்தப்படுத்திக்கொள்வது என்றால் எல்லோராலும் அவ்வளவு நன்றாக புரிந்து கொள்ள முடியாது.

இன்னொரு படியிருக்கிறது. உங்கள் இதயத்தை சுத்தப்படுத்திக்கொள்வது. மன அளவிலே நல்ல, கெட்ட கருத்துக்கள் வருகின்றன, நினைப்புக்கள் வருகின்றன. ஆனால் ஹிருதயமானது உணர்ச்சிகளை பிரதிபலிக்கின்றது. பல சமயங்களிலே ஒருவருடைய நினைப்பைக்கூட கட்டுப்படுத்தி விடலாம். ஆனால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவது மிகக் கஷ்டம். யார் இதயத்தை சுத்தப்படுத்த முடிகின்றது? பகவான் ராமகிருஷ்ணர் போன்ற பெரிய ரிஷிகள், இன்னும் நம் நாட்டிலே பல பக்கங்களிலே, நாம் நாம் தெரிந்திருந்த பல ரிஷிகள், சாதுக்கள், அவர்களுடைய உபதேசங்கள்தான் நமது உணர்ச்சிகளைத் தூய்மை படுத்துகின்றன. ஆகையினாலே இந்த விழாவானது நமது மனதை மட்டும் தூயப் படுத்துவது அல்ல நமது உணர்ச்சிகளையும் தூயப் படுத்துகின்ற ஒரு பெரிய விழாவாகும்.

இனி மூன்றாவது படி வருகின்றது. மனதையும் தூயப்படுத்தி இருதயத்தையும் தூயப்படுத்தினால்; அடுத்தது என்ன? அதாவது நமது உடம்பை சுத்தப்படுத்தி குளித்து புத்தாடை அணிந்துகொண்டு இருப்பது போல — குளித்துவிட்டு புதிய உடை போட்டுக்கொண்டு எங்கேயாவது போகவேண்டும் என்று நினைக்கிறோம் அல்லவா? அதற்காகத்தானே அதெல்லாம் செய்கின்றோம்? அதேமாதிரி நம்முடைய மனத்தையும் தூயப்படுத்தி, இருதயத்தையும் தூயப்படுத்தி இனி நாம் எங்கே போக விரும்பு

கின்றோம்? எங்கே போகவேண்டும்? யார் நமக்கு எங்கே செல்வது என்று சொல்லுவார்கள்? நமது குறிக்கோள் எது? நாம் எங்கு செல்லவேண்டும் என்று யார் எடுத்துச் சொல்லுவார்கள்? பகவான் ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் போன்ற பெரியவர்கள்தான் நமக்கு எங்குப் போகவேண்டும்? எப்படிப் போகவேண்டும் என்றெல்லாம் வழிகாட்டு கின்றார்கள். அதாவது கடைசியிலே நமது ஜீவாத்மா வானது பரமாத்மாவோடு ஒன்றாக ஐக்கியமாவதுதான் நமது குறிக்கோள் என்று அவர்கள் காட்டுகின்றார் கள். அது ஒரு மிகக் கடினமான வழி. அது ஒரு சில பேருக்குத்தான் தெரியும். அதைப் புத்தகத் தின் மூலமாகப் படிக்க முடியாது. ஆகையினால்தான் நம் வேதப் புத்தகங்களிலே, மதப் புத்தகங்களிலே சொல்லி இருக்கின்றன. ஒரு குருவினுடைய உதவி இல்லாமல், வழிகாட்டுதல் இல்லாமல் அந்தக் குறிக் கோளை அடையமுடியாது என்று.

சில பேருக்கு இந்தமாதிரி குருவினுடைய வழி காட்டுதல் அவசியமில்லாமல் இருக்கலாம். எப்படி நம்மில் சிலபேர் சிவப்பாக, கருப்பாக பிறப்பிலேயே பிறந்திருக்கிறோமோ, அதே மாதிரி சிலபேர் ஆண்ட வனுடைய அனுக்கிரகத்தோடு பிறந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மிக மிகக் குறைவு. கோடி யில் ஒருவர் இருந்தால் பெரிய காரியம். அத்தகைய ஒருவர்தான் நம் பகவான் ராமகிருஷ்ணர். அவர் ஆறு வயது சிறுவனாக இருந்தபொழுதே அவருக்கு சமாதி நிலை ஏற்பட்டது. ஒரு நாள் அவர் நெல் வயலிடையே போனார், போகும்பொழுது எங்கு பார்த்தாலும் ஒரு பச்சையான சூழ் நிலை. ஆகாயத் திலே கரிய மேகங்கள் இருந்தன. அந்த சமயத் திலே ஆகாயத்திலே வெள்ளைக் கொக்குகள் பறந்து

சென்றன, இவைகளைப் பார்த்த உடனே ஆண்டவனுடைய இயற்கை அமைப்பு அவருக்கு ஞாபகம் வந்தது. அதன் காரணமாக அவர் தன்னுடைய நினைவை இழந்து, ஆண்டவனுடைய நினைவில் ஐக்கியமாகி சமாதி அடைந்துவிட்டார்.

நாம் எல்லோரும் படித்தவர்கள் பகுத்தறிவுள்ளவர்கள். அதன் காரணமாக நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஒரு சமாதி நிலைமை ஆறு வயதான ராமகிருஷ்ணருக்கு மட்டும் ஏற்பட்டது. ஆனால் ஆறு வயதான எத்தனை குழந்தைகளுக்கு ஏற்படவில்லை? நாம் அரசியல் புரட்சிக்காரராக இருந்தால் உடனே கடவுள் பேரில் கோபப்படுவோம். உடனே நாம் கருப்புக் கொடியைப் பிடித்துக் கொண்டு கடவுளுக்கு எதிராக ஊர்வலம் செல்வோம். நமக்குக் கடவுள் எங்கே இருக்கிறார் என்று தெரியாது. அதனால் சும்மா இருக்கின்றோம். எனக்கும் தெரியாது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பாக நான் புத்தருடைய வாழ்க்கையைப் படித்தேன். இதே கேள்விகளை புத்தரும் கேட்டுக்கொண்டு தன்னுடைய அரண்மனை, மனைவி, குழந்தை இவைகளை எல்லாம் விட்டு விட்டு உண்மையை காண்பதற்காக, தெரிந்து கொள்வதற்காக, காடுகளை நோக்கிச் சென்றார். ஆறு ஆண்டுகள் அவர் தபஸ்த்யானம் தொடர்ந்து செய்தார். ஆனால் அவர் என்ன விடை கண்டு பிடிக்க வேண்டும் என்று — உண்மை என்னவென்று கண்டு பிடிக்கப் புறப்பட்டார் அல்லவா, அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கடைசியாக அவர் புத்தகயாவுக்குப் போனார். பௌரணமியன்று அவர் அசோக மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். அந்த இரவு அவர் தியானம் செய்தார், முதல் ஜாமத்திலே அதாவது

முதல் பாதி இரவிலே அவருக்குப் பலவிதமான காட்சிகள் வந்தன. அவர் மனதை ஆசைப்படுத்து கின்ற, உணர்ச்சிவசப்படுத்துகின்ற, கவர்ச்சியடையச் செய்கின்ற பலவிதமான காட்சிகள் அவருக்கு வந்தன. அவர் சொன்னர் இவையல்ல நான் வேண்டு வது, தேடிவந்தது, நீங்கள் போய்விடுங்கள் என்று அவைகளைப் புறக்கணித்தார். சாத்தான் ஏசுநாதரை இதேமாதிரி கவர்ச்சி செய்ய முயன்றபொழுது, ஏசுநாதர் சொன்னர், "சாத்தானே நீ போ, நீ வேண்டாம்" என்று சொன்னர்.

இரண்டாவது ஜாமத்தில் புத்தருக்கு அவரை பயப்படுத்துகின்றமாதிரி காட்சிகள் நிறைய வந்தன. புத்தர் சொன்னர் "எனக்கு இதைப்பற்றி பயமில்லை. நீங்கள் செய்யக்கூடியது எல்லாம் என் உயிரை எடுத்துக்கொள்ளலாம். அவ்வளவுதானே நான் அதற்கு என்றும் தயாராக இருக்கிறேன்." ஆகையி ஞல் அவைகள் எல்லாம் மறைந்து விட்டன.

மூன்ருவது இரவிலே நிறைய சக்திகள் வரு கின்றமாதிரி காட்சிகள் வந்தன. ஆன்மீக சக்தி, மற்ற சக்திகளும் வந்தமாதிரி காட்சிகள் வந்தன. உங்களில் பல பேருக்கும் அஷ்ட சித்தி என்ருல் என்ன என்று தெரியும். உங்களுக்கு செய்ய முடியும் என்று அல்ல, கேள்விப்பட்டு இருப்பீர்கள். இந்த அஷ்டசித்திகளும் ஆன்மீக சாதனையினுலே பெறப் படுகின்றன. ராமாயணத்தை நீங்கள் படிக்கின்ற போது அங்கு ஹனுமான் ஒரு பெரிய மலையைத் தூக்கிவந்தார் என்ருே ஒரு ராக்ஷசியின் வாயில் ஒரு அணு உருவமெடுத்து மிதந்து சென்ருர் என்ருே படிக்கின்ருேம். அப்படிப் படிக்கும் பொழுது அவர் எப்படி அப்படியெல்லாம் செய்தார் என்று சொன்

ஞல், தன்னுடைய அஷ்டசித்தியின் காரணமாக இதையெல்லாம் செய்ய முடிந்தது. அஷ்டசித்தி களும் அவருக்கு வரும்பொழுது புத்தர் அவைகளே யும் நிராகரித்தார். "இவை என்னுடைய குறிக்கோள் அல்ல'' என்று சொல்லி.

கடைசியில் நான்காவது ஜாமத்திலேதான் அவ ருக்கு உண்மை புலப்பட்டது. எப்படி ஒரு விவசாயி மாடு வைத்துக் கொண்டிருக்கின்றவன் மலே மேலே போகின்றபோது பத்து இருபது முப்பது கிராமங் களேப் பார்க்க முடிகின்றதோ அதேமாதிரி புத்தரும் இந்த நான்காவது ஜாமத்திலே கண்டார் ஐநூறு ஜன் மம் எடுத்திருக்கின்ருர். இந்தமாதிரி நிலேமையை அடைவதற்கு. இதற்கு முன்தான் ஐநூறு ஜன்மம் எடுத்திருப்பதைக் கண்டார். இந்த ஐநூறு ஜன்மங் களிலே, தான் நினைத்த நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள்தான் இந்த நிலேமையை அடைவதற்கு உதவி செய்தன என்றும், தான் செய்த தீய செயல் கள்தான் இந்த நிலேமையை அடைவதிலிருந்து பின்னுக்கு இழுத்தன என்பதையும் கண்டார்.

ஆகையினுலே நம் ஆத்மாவினுடைய முன்னேற் றம், எப்படி ஒரு செடியானது எரு, தண்ணீர் இவற் றின் உதவியினுல் வளருகின்றதோ, அதேமாதிரி நம் ஆன்மாவும் நாம் செய்கின்ற நல்ல காரியங்கள், பேசு கின்ற நல்ல விஷயங்கள் இவற்றின் உதவியினுலே தான் வளருகின்றன. ஆகையினுலே புத்தர் முடிவு செய்தார், நம் ஆன்மாவுடைய முன்னேற்றம் வளர்ச் சியை குறிப்பிடுவது என்னவென்று சொன்ஞல், நாம் செய்கின்ற நல்ல காரியமும், கெட்ட காரியமும், நல்ல எண்ணம், கெட்ட எண்ணம், நல்ல பேச்சுகள், கெட்ட பேச்சுகள் இவைதான் நம் ஆன்மாவின்

வளர்ச்சியை, குறிக்கோளை முடிவு செய்கின்றன. புத்தர் யாகயஞ்யங்கள் செய்வதற்கோ, தெய்வத்தை ஒரு குறிப்பிட்ட உருவத்தில் வணங்குவதற்கோ முக்கியத்துவம் கொடுக்கவில்லை ஆகையினாலே அவர் வேலை செய்வதற்கு முக்கியத்துவம் கொடுத்தார். அந்த வேலைக்காக நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள், நல்ல சிந்தனைகள் இருக்க வேண்டும் என்பது தான் அவருடைய உபதேசம் கருத்து. ஸ்வாமி விவேகானந்தரின் வார்த்தைகளில் சொல்லப்போனால், புத்தர் ஒரு பெரிய கர்மயோகி. சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஏழு பேச்சுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அவை அவருடைய புஸ்தகங்களில் வந்திருக்கின்றன. புத்தர் எவ்வாறு காரியங்கள் செய்தார் எவ்வாறு செயல் தொடங்கினார் என்பதைப் பற்றி வெகு நன்றாகச் சொல்லி இருக்கிறார்.

நாம் இப்பொழுது இங்கிருக்கிற கூட்டத்தின் ஆன்மீக ஒரு பக்கத்தைப் பார்த்து விட்டு, லௌகிக நோக்கத்தோடும் கொஞ்சம் பார்க்கட்டும். நம்முடைய ஒவ்வொரு ஆன்மீக வாழ்க்கையும், ஆன்மீக சாதனையும் நம்முடைய அன்றாட வாழ்க்கைக்குக் கொஞ்சம் சம்பந்தமுள்ளதாக இருக்க வேண்டும். உடலையும் ஆன்மாவையும் ஒரேயடியாக முழுக்க முழுக்க பிரிக்க முடியாது.

இப்பொழுது எனது நண்பர் திரு. தேவராஜுலு அவர்கள் திறந்து வைத்த திறப்பு விழாவிலே நான் தலைமை வகித்தேன். நான் அதில் ஒரு பகுதியைப் பார்த்தேன். அதில் ரூபாயின் - நாணயத்தின் மதிப்பு குறைப்பு என்பதைப் பற்றிப் போட்டிருந்தார்கள் அதைப் பார்த்தது எனக்கு மிகவும் உற்சாகமாகவும் கவர்ச்சி கரமாகவும் இருந்தது. இந்த நாணய

மதிப்புக் குறைப்பானது ரொம்பவும் முக்கியமான ஒரு விஷயம் இந்த நாணய மதிப்புக் குறைப்பு நம் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கின்றது. இது நம் நாட்டினுடைய முன்னேற்றத்தைக் கொஞ்சம் தடுமாற வைக்கிறது. ஆன்மீக வளர்ச்சி எப்படி ரகசியமாக இருக்கின்றதோ அதேமாதிரி இதுவும் ஒரு ரகசியமான விஷயம் – ஏன் இப்படிச் செய்தார்கள் இதன் விளைவுகள் என்ன என்பதெல்லாம் – இந்த நாணய மதிப்புக் குறைப்பு என்கிற பிரச்சனை பற்றி பல பத்திகைகள் பல நிபுணர்கள் ஒருபக்கமாக, இந்தப் பக்கமோ, அந்தப் பக்கமோ பேசுகிறார்கள் – எப்படி மொழி வல்லுனர்கள், உபநிஷத், வேதம் போன்ற நூல்களைப் படிக்கின்ற மொழி வல்லுனர்களுக்கு ஆண்டவனைப் பற்றி ஒன்றும் தெரியாதோ அதேமாதிரி இந்த நாணய மதிப்புக் குறைப்புப்பற்றி பத்திரிகைகளில் எழுதுகின்ற நிபுணர்களுக்குக் கூட இதன் உண்மையான ரகசியம் தெரியாது.

நான் ஒரு பார்லிமெண்ட் அங்கத்தினர் ஆகையினால் கடந்த 30 வருஷங்களாக எனக்கு இதைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். நானும் பொருளாதாரம் படித்தவன். ஆகவே நான் அது கெட்டது என்றும், நல்லது என்றும் இரண்டுவிதமாக வாதாட முடியும். நான் இந்தியாவின் பிரதம மந்திரியை திருப்தி படுத்த வேண்டுமென்று சொன்னால் நாணய மதிப்புக் குறைப்புத்தான் மிகவும் நல்லது என்று வாதாட முடியும். நான் பிரதம மந்திரிக்கு எதிராகவோ, காங்கரஸுக்கு எதிராகவோ வாதாட வேண்டுமென்று சொன்னால் கோபப்பட்டு, நாணய மதிப்புக் குறைப்பு மிகவும் கெடுதல் என்றும் சொல்ல முடியும்.

சில வாரங்களுக்கு முன்பாக இதைப் பற்றி ஒரு புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தேன். வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு பெரிய ராஜ தந்திரி. அவர் ஒரு பெரிய ராஜ தந்திரி மட்டுமல்ல. எல்லா விஷயங்களையும் பற்றி மிகச் சிறப்பாக எழுதக்கூடிய பெரிய எழுத்தாளரும் கூட. இங்கிலாந்து தன்னுடைய பவுன் மதிப்பைக் குறைக்க வேண்டிய சந்தர்ப்பத்திலே அவர் பார்லிமெண்டில் ஒரு பேச்சுப் பேசினர். எப்படி ஒரு நண்பனுக்கு சீக்கு வந்திருந்தால் வருகின்றவர்கள் எல்லோரும் ஆளுக்கு ஒரு மருந்து சொல்லுகிறார்களோ, அதேமாதிரி நாட்டிலே பொருளாதாரத்தை திருத்துவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொல்லுகிறார்கள். நாணய மதிப்புக் குறைக்கலாம் என்று சொல்லி — நம் வீட்டிலே யாராவது நோய்வாய்ப்பட்டு இருந்தால் டாக்டரை வரவழைப்பதற்கு முன்னல் நாம் ஆளுக்கு ஒன்று சொல்லுவோம். "வென்னீர் குடியுங்கள், இதைச் சாப்பிடுங்கள் அதைச்சாப்பிடுங்கள்" என்று ஆளுக்கொன்று ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்போம். அதாவது அதன் அர்த்தம் என்னவென்றால் நாம் பெரிய எக்ஸ்பர்ட் நமக்கு வைத்தியம் தெரியும் என்று நினைத்து நம்மை நாமே பெருமைப் படுத்திக்கொள்ளுகிறோம். அப்படிச் சொல்வதன் மூலம், அதிலும் நீங்கள் தப்பாகச் சொல்லுகிறீர்கள் என்று அடுத்தவர் நிரூபிக்க முடியாத ஒரு துறையிலே நீங்கள் நிபுணர் என்று செல்லிக்கொள்ளுவது சுலபம். ஆகையினலே நாணய மதிப்புக் குறைப்பு பற்றி இரண்டு பக்கத்திலும் நல்லது கெட்டது என்று சொல்லுகின்ற வாதம் இருக்கிறதே அதைப் பற்றி நாம் கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டு மாதங்களுக்கு முன்பாக நான் அமெரிக்காவுக்குப் போவதற்கு முன்பாக எனக்கும்

இதைப் பற்றி ஒரு தலைப் பக்ஷமான கருத்துத்தான் இருந்தது. நான் பிரதம மந்திரியிடம் கோபப் பட்டிருந்த பொழுது இதற்கு விரோதமாகப் பேச வேண்டும் என்று நினைத்திருந்தேன். நான் கொஞ்சம் அமைதியாக சமாதானமாக இருந்த பொழுது ஒரு வேளை இது அவசியம்தானே என்று நினைத்தேன், அமெரிக்காவிலும் கனடாவிலும் இரண்டு மாதம் தங்கி அங்குள்ள நிபுணர்களுடன் பேசினேன். அவர்களுடன் பேசிய பிற்பாடு என் மனதில் புதியதொரு விதமான கருத்து எற்பட்டது. அங்கு எனக்கு எற்பட்ட அனுபவங்களை உங்கள் முன் வைக்கின்றேன். விவாதங்களை அல்ல, நான் பார்லி மெண்டிலே அங்கத்தினராக கடந்த 30 வருஷங் களாக இருப்பதினாலும் வக்கீல் என்ற காரணத்தின லும், நான் உங்கள் முன்னால் வைக்கின்ற விவரங்கள் ஒரு வேளை வாதாடுதல்கள் போல இருக்கலாம் ஆகை யினால் நான் சொல்லுகிற கருத்துக்களை மாத்திரம் எடுத்துக் கொள்ளுங்கள், விவாதங்களை விட்டு விடுங்கள்.

என் நாணய மதிப்புக் குறைப்பு செய்ய வேண்டி யிருந்தது என்று சொன்னால், உலகத்திலே மற்ற நாடுகளோடு பார்க்கின்ற பொழுது நம்முடைய ரூபா யின் மதிப்பு கீழே போய் விட்டது. சரியான அரசாங்க விதிப்பிரகாரம், ஒரு டாலருக்கு $4\frac{1}{2}$ ரூ. இருந்தது. ஆனால் சந்தையிலே வெளியே பார்க்கின்ற பொழுது ஒரு டாலருக்கு பத்து ரூபாய் கூட இருந் தது. அவ்வளவு குறைவாக மதிப்பு இருந்தது. இது எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு விஷயம். ஆகையினால் நாணய மதிப்புக் குறைப்பிற் கும் விலைவாசி இருக்கின்ற ஒரு தன்மைக்கும் சம்பந்தம் உண்டு. ரூபாயின் மதிப்பு நாம் வாங்கு

கின்ற பொருளை வைத்து அளக்கின்றபோது அதிக மாக இருந்தால் நாணய மதிப்பைக் குறைக்க வேண்டியதில்லை. ஆனால் குறைவாக இருந்தால் குறைக்க வேண்டும். ஆனல் வெளி நாடுகளில் நம் ரூபாயானது ஒரு டாலருக்கு $4\frac{1}{2}$ ரூபாய் என்கிற அளவிலே எவ்வளவு வாங்க முடியும் என்று நினைத் தோமோ அவ்வளவு வாங்க முடியவில்லை பொருள் களை. ஆகையினாலே நாம் எதிர் பார்த்த அளவுக்கு நம் ரூபாயானது வாங்கும் சக்தியை இழந்து விட்ட பொழுது நாணயத்தின் மதிப்பை குறைக்க வேண்டி யிருந்தது.

ஆனால் நான் இப்பொழுது கேட்கிறேன். நாம் என்னென்ன பொருள்களை வாங்க வேண்டியிருந்தது? நாம் அதிகமாக இங்கே செய்ய முடியாத யந்திரங் களையும், யந்திர சாதனங்களையும் வாங்கினோம். பெட்ரோல் எண்ணை போன்ற இங்கு உற்பத்தி செய்ய முடியாத அல்லது குறைவாக உற்பத்தி செய் கின்ற பொருள்களை நாம் வெளியில் வாங்கினோம். இவைகள்தான் முக்கியமான இரண்டு பொருள்கள் நாம் வெளியே வாங்கினது. இந்த இரண்டையும் பற்றி நான் பின்னாலே பேசுகிறேன்.

நான் அமெரிக்காவிலும், கனடாவிலும் என்ன பார்த்தேன்? நான் அமெரிக்காவில் போய் பூட்ஸ் வாங்கவேண்டும் என்று நினைக்கவில்லை. காரணம் அங்கு போனால் விலை அதிகம் என்று தெரியும். அதன் காரணமாக இங்கேயே வாங்கிக்கொண்டு போய் விட்டேன். நான் கனடாவின் தலை நகரான ஒட்டாவாவில் நடந்து கொண்டிருக்கும் பொழுது என்னுடைய பூட்டினுடைய குதி இருக்கின்றதே அது கழன்று போய்விட்டது. இரண்டு பூட்சுகளின்

குதியும் போகவில்லே அப்படியிருந்தால் இரண்டும் குதியில்லாமல் நடந்து கொள்ளலாம். ஒன்றுதான் போய்விட்டது ஆகையினுலே அந்தக்குதி போன பூட்சுக்கு ஒரு குதி போட வேண்டியிருந்தது. ஒரு கடைக்குப் போனேன், ஒரு பூட்சுக்குக் குதி வைப்பதற்கு என்ன சார்ஜ் என்று கேட்டேன். "$2\frac{1}{2}$ டாலர் சார்" என்ருன். ஒரு குதி மாட்டுவதற்கு $2\frac{1}{2}$ டாலர் என்று சொன்ஞன் அதாவது $18\frac{1}{2}$ ரூபாய், 19 ரூபாய் ஆகிறது. எனக்கு வேறு வழியில்லே. நான் வேடிக்கையாகச் சொன்னேன், இந்தியாவில் இரண்டு பூட்சுமாக 20 ரூபாய் இங்கு ஒரு பூட்சுக்குக் குதி வைப்பதற்கு மாத்திரம் 19 ரூபாய் கேட்கிறீர்களே என்றேன். (சிரிப்பு.) நான் இந்தக் குதி வைத்த பிற்பாடு அந்த வேலே செய்தானே அவனுக்குக் கொஞ்சம் பக்ஷீஸ் கொடுக்க வேண்டும் அதுவேறு $\frac{1}{2}$ டாலர் அதாவது $3\frac{1}{2}$ ரூபாய். நான் புதிதாக பேட்டாவில் இரண்டு ஷூ 25 ரூபாய்க்கு வாங்கினேன். அங்கு ஒரு ஷூவுக்குக் குதி வைப்பதற்காக ஏறக்குறைய 25 ரூபாய், 22 ரூபாய் கொடுக்க வேண்டியிருந்தது. நான் போட்டுக்கொண்டிருந்த மாதிரி பூட்ஸ் வாங்கவேண்டுமென்று சொன்ஞல் 150 ரூபாய் ஆகும். அங்கு இதே மாதிரிதான் மற்ற உபயோகிக்கின்ற எல்லா பொருள்களுக்கும்.

என்னுடைய நண்பர் திரு தேவராஜுலுவிடம் கேட்டேன், "கோயம்புத்தூரில் $1\frac{1}{2}$ ரூபாய் கொடுத்தால் நன்ருகச் சாப்பிடலாம் ஒரு ஹோட்டலிலே" என்று சொன்ஞர். இதுமாதிரி சாப்பாடு அமெரிக்காவிலோ, கனடாவிலோ 5 டாலர் அதாவது "38 ரூபாய்க்குக் குறைவாகக் கிடைக்க முடியாது. அறை வாடகையும் அப்படித்தான் ஹோட்டலிலே. நான் அரசாங்கப் பிரதிநிதியாகப் போனதினுலே

நல்ல ஹோட்டலுக்குப் போக வேண்டியிருந்தது. அந்த நல்ல ஹோட்டலிலே ஒரு நாளைக்கு 21 டாலர் அதாவது 150 ரூபாய் வரை கொடுக்க வேண்டியிருந்தது வாடகை மட்டும் காலை சிற்றுண்டிக்கு 5 டாலர், மத்தியானம் சாப்பாட்டிற்கு 10 டாலர், ராத்திரி சாப்பாட்டிற்கு 12 டாலர் இப்படியாக. இந்த சூழ்நிலையில் நீங்களே யோசியுங்கள். நம்முடைய ரூபாய்க்கு வாங்கும் சக்தி அதிகம் இருக்கின்றதா? அல்லது அமெரிக்காவிலுள்ள டாலருக்கு வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறதா? ரூபாய் டாலரைப் போல் அவ்வளவு மோசமானதல்ல. நம் நாட்டிலே நாம் இருந்தால் நம் ரூபாய்க்கு மதிப்பு இருக்கிறது. அமெரிக்காவிலும் கனடாவிலும் அந்த டாலரானது இந்தியாவில் ரூபாயானது எவ்வளவு பொருளை வாங்க முடியுமோ அதை விடக் குறைவாகத்தான் வாங்குகின்றது. நாம் அமெரிக்காவிலிருந்து பூட்சுகளையோ, அங்கு தயார் செய்யப்பட்ட உணவுகளையோ வாங்குவதில்லை. அதன் காரணமாக நம் ரூபாய்க்கு என்ன மதிப்பு இருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை. இதெல்லாம் நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் நமது ரூபாயின் மதிப்பு, அமெரிக்க நிபுணர்கள் எவ்வளவு மோசம் என்று சொல்லுகிறார்களோ அவ்வளவு மோசம் இல்லை உண்மையிலே.

சரி, நாம் என்ன பொருள் வாங்கினோம், இங்கு செய்யாத யந்திரங்கள், ஏரோப்ளேன் போன்ற பொருள்களை வாங்கினோம். நாம் அவைகளைச் செய்ய முடியாது என்று தெரிந்த உடனேயே அவர்கள் அதற்கென்று தங்களுடைய விலையை வைத்துக் கொள்ளுகிறார்கள். ஒரு கிராமத்திலே நாம் கடன் வாங்க வேண்டும் என்று நினைக்கிற பொழுது, ஒரே

லேவாதேவி வட்டிக் கடைக்காரனிடம் போனல் அதிக வட்டி கேட்கிருன். இரண்டு மூன்று பேர் இருந்தால் போட்டி போட்டுக்கொண்டு வட்டியைக் குறைக்கின்றூர்கள். ஒரே வட்டிக் கடைகாரன் இருந்தால் "50 சதவிகிதம் எனக்கு வட்டி கொடுங்கள் இல்லாவிட்டால் கடன் கொடுக்க மாட்டேன்" என்பான் அல்லது ஒரு கிராமத்திலே ஒரே ஒரு வண்டிதான் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்களேன், அந்த வண்டியை எல்லோரும் தங்கள் சாமானத்தை எடுத்துக்கொண்டு போவதற்கோ, விவசாயத்துக்கோ வேண்டுமென்று கேட்கிருர்கள் வண்டிக்காரன் அப்பொழுது தனக்குத் தோன்றின விலை சொல்லுகின்ருன் வண்டி 200 ரூபாய் விலை யிருந்தால் கூட, 500 ரூபாய் கொடுக்காமல் இதை நான் கொடுக்க மாட்டேன் என்கிருன். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் அங்கு செய்யப்படுகின்ற யந்திரங்களையும், சாமான்களையும் நாம் வாங்கும் பொழுது இப்படிப்பட்ட விவகாரம்தான் நடக்கிறது. டாலர், பவுன் இவைகளுக்கு மிக முக்கியத்துவம் என்ன என்ருல் அவைகள் அரசியல் துறையிலே அதிக சக்தியுள்ள நாடுகளின் கைகளிலே இருக்கின்றன.

நீங்கள் பழனிக்கோ, திருப்பதிக்கோ போயிருப்பீர்கள். நீங்கள் அங்கு இருக்கும் பிச்சைக்காரர்களுக்கு ஆளுக்கு ஒரு பைசா கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் உங்களிடம் சில்லரை இல்லை என்று வைத்துக் கொள்ளுங்களேன். கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்கள், சில்லரை இல்லை. அங்கு சில்லரை கொடுப்பதற்கென்றே சிலபேர் பெட்டியை வைத்துக் கொண்டு இருக்கிருர்கள் — நீங்கள் ஒரு ரூபாய்க்கு சில்லரை வேண்டுமென்று

கேட்டால் அவர்கள் ஒரு நயா பைசா கமிஷன் கேட் பார்கள் — அங்கு சில்லரை கொடுப்பவன் ஒரே ஒருவன் இருந்தால் அவன் சொல்லுவான் “எனக்கு 2 நயா பைசா கமிஷன் கொடுத்தால் தான் கொடுக் கிறேன்” என்று சொல்லுவான். நீங்கள் என்ன செய்வீர்கள். ஒரு ரூபாயை ஒரு பிச்சைக்கார னுக்குக் கொடுக்க முடியாது. ஆகையினுல் பரவா யில்லே 2 நயா பைசா போனுல் போகிறது என்று வாங்குவீர்கள். ஆகையினுலே இந்த ரூபாயை சில்லரையாக மாற்றுகின்ற விகிதம் இருக்கிறதே அங்கே இருக்கின்ற அந்த சில்லரை கொடுப்பவர் முடிவு செய்கின்றுர்.

இந்த உலக நாடுகளுக்கிடையே பணத்தை மாற்றுகின்ற அந்த விவகாரம் இருக்கின்றதே, அந்த சந்தை போன்றது அதை அமெரிக்கர்களோ, இங்கிலிஷ்காரர்களோ, யூதர்களோ வைத்துக் கொண்டிருக்கிறுர்கள். அந்த நாணயத்தை மாற்று கின்ற விகிதமானது இப்படியாக மாற்றிக் கொள்ளப் படுகிறது அவர்களினுல், அவர்களுடைய சவுகரியத் திற்கு. ஆகையினுலே இந்த ரூபாயின் நாணய மதிப்புக் குறைப்பு நாணயத்தின் வெளிநாட்டு செலா வணி விகிதம் இதெல்லாம் வெகு சுலபமான காரியம் அல்ல. இங்கிலாந்திலே, அமெரிக்காவிலே, இன்னும் இந்தமாதிரி சந்தைகளிலே யாருக்கு அதிக உரிமை இருக்கிறதோ அவர்கள்தான் இதையெல்லாம் முடிவு செய்கின்றுர்கள் அவர்கள் சவுகரியத்துக்கு.

ஆகையினுலே, உலகத்திலே சில மிகப் பெரிய வர்கள் நினைக்கிறுர்கள் உலகத்திலுள்ள நாணயங்கள் பலவற்றையும் நீக்கிவிட்டு ஒரே உலக நாணயம் அமைத்தால் என்ன என்று நினைக்கிறுர்கள். ஒரே

உலக நாணயம் இருந்தால் இந்த மாதிரியான சில்லரை மாற்றுகிற மாதிரி விகிதங்களை மாற்றுவது லாபம் அடிப்பது செய்ய முடியாது. இதைப் பற்றி உலக நாடுகளுக்கிடையே பெரிய மகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. சில நாடுகள் இந்த மாதிரி ஒரே உலக நாணயங்கள் வைத்துக் கொள்வதை ஒத்துக் கொண்டு இருக்கிறார்கள், சில நாடுகள் இதை எதிர்க்கின்றன. யார் எதிர்க்கிறார்கள்? அமெரிக்கா இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற 10 நாடுகள் உலகத்திலேயே மிகவும் சக்திவாய்ந்தவைகள் – யார் பெரிய பெரிய யந்திரங்களை யெல்லாம் உற்பத்தி செய்கிறார்களோ, யார் இந்த நாணய விகிதங்களை முடிவு செய்கிறார்களோ, அவர்கள்தான் இதை எதிர்க்கிறார்கள்.

ஆகையினாலே வரப்போகிற பொதுத் தேர்தலுக்குப் பின்னாலே வரப்போகின்ற பார்லிமெண்டானது இந்த மிகு நுணுக்கமான, முக்கியமான பிரச்னையைப் பற்றி அதிக நேரம் சிலவு செய்து விவாதிக்க வேண்டியிருக்கும். நான் சொல்லுவதெல்லாம் என்னவென்றால், வெளி நாட்டிலே இருக்கின்ற அவர்கள் சொல்லுகிற மாதிரி ரூபாய் அவ்வளவு மோசமல்ல. ஆகையினாலே ரூபாயானது இன்றைக்கும் நம் நாட்டிலே அமெரிக்காவில் அமெரிக்கன் டாலர் எவ்வளவு டாலர் வாங்க முடியுமோ அதைவிட அதிகமாக இங்கு வாங்குகிறது. இது மிகவும் நுணுக்கமான நுட்பமான விஷயம். ஆகையினாலே மணிக் கணக்காகப் பேசிக்கொண்டே போகலாம்.

நான் இந்தக் கூட்டத்தை ஒரு பொருளாதார வகுப்பாக மாற்ற நான் விரும்பவில்லை. இது ஆன்மீகத் துறையைப் பற்றி நினைப்பதற்காக வந்திருக்

கின்ற ஒரு கூட்டம். இந்த விழாவை எற்பாடு செய்திருக்கின்றவர்கள் என்னை இங்கு அழைத்து, உங்களை எல்லோரையும் பார்ப்பதன் மூலமாகவும், இங்கு பகவான் ராமகிருஷ்ணரின் சன்னிதானத்தில் இருக்க வைப்பதன் மூலமாகவும் எனக்குப் பெரிய மரியாதை செலுத்தி யிருக்கின்றார்கள். எங்கெல்லாம் நல்லவர்கள் கூடியிருக்கின்றார்களோ, எங்கெல்லாம் ராமநாம பஜனை செய்யப்படுகின்றதோ, அங்கெல்லாம் ஆண்டவன் நிச்சயமாக இருப்பார். அதுதான் நம்முடைய நம்பிக்கை, அதுதான் நம் வேதத்தினுடைய தாத்பர்யமும்.

அந்த ஆண்டவன் உங்கள் எல்லோரையும் என்னையும் நல்ல வழிகளில் செலுத்தி நம் எல்லோரையும் நல்ல முறையிலே வாழ்வதற்கு அருள்புரிய வேண்டும் என பிரார்த்தித்துக் கொள்கிறேன். வணக்கம். (கரகோஷம்).

Vote of thanks

வணக்கத்திற்குரிய தலைவர் திரு ஹனுமந்தையா
அவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே,

வணக்கம். இன்று காலை நிகழ்ச்சிகளிலே, காலையிலே கொடி ஏற்றுவித்தார்கள் திருமதி துளஜாராமராவ் அவர்கள். அவர்களுக்கு எங்கள் வித்தியாலயத்தின் சார்பிலே எங்களுடைய உளம் கனிந்த நன்றியைத் தெருவித்துக் கொள்ளுகிறோம். அடுத்தபடியாகக் கல்விப் பொருட்காட்சியைத் திறந்து வைக்கும் இந்த விழாவிற்கு மைசூர் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு K. ஹனுமந்தையா அவர்கள் தலைமைதாங்கி இப்பொழுது ஒரு அரிய பெரிய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். இந்தக் கல்விப் பொருட் காட்சியை நம்ம கோவை வட்டாரத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஸ்ரீ ஜி. கே. தேவராஜுலு அவர்கள் அந்தக் கல்விப் பொருட் காட்சியைத் திறந்து வைத்துப் பேசினார்கள். இந்தக் கல்விப் பொருட்காட்சியை அமைப்பதிலே எங்களுக்கு ஒரு பெரிய அனுபவம், கல்வி அனுபவம், சிக்கலான கருத்துக்களை மக்களுக்கு தெளிவாக எடுத்துக் காட்ட நாங்கள் செய்த முயற்சியிலே நாங்களும் பெரிதும் அநுபவத்தை அடைகின்றோம். இந்தக் கல்விப் பொருள் காட்சியிலே 12 பகுதிகள் இருக்கின்றன, அந்தப் பனிரெண்டு பகுதிகளையும் நாம் அனைவரும் கண்டு பயன் அடையலாம். உயர்நிலைப் பள்ளி படிப்பு இந்தியாவிலும், பிறநாடுகளிலும் என்பது ஒன்று – ரூபாயின் மதிப்புக் குறைப்பு, நெல் சாகுபடிமுறை, காந்திஜீயின் இயற்கை மருத்

துவ முறைகள், உடல் தகுதித் திட்டம், ராணுவத்தில் உபயோகிக்கும் சில கருவிகள், குழந்தைகளின் ஓவியக் காட்சி, இந்தியாவின் தாதுப் பொருள்கள், அன்றாட வாழ்க்கையில் மின்சாரம், படக்காட்சி, ஐக்கிய நாடுகளின் அமைப்பு, நீர்ப்பாசனமும் மோட்டாரும் ஆகிய 12 பகுதிகள் இருக்கின்றன — இந்தப் பல்வேறு பகுதிகளை வித்யாலயத்தைச் சேர்ந்த கல்வி நிலையங்கள், கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகளும் அமைத்திருக்கின்றன. அதேமாதிரி கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி மாணவிகளும் ஆசிரியைகளும் ஐக்கிய நாடுகளின் அமைப்பைப் பற்றி சிறப்பான முறையிலே பொருட் காட்சியை அமைத்துள்ளார்கள். இந்தப் பொருட் காட்சிகளையெல்லாம் நாம் கண்டு அனுபவிக்கலாம்.

இந்த விழாவிலே தலைமைதாங்கி இந்த விழாவைச் சிறப்பித்த திரு ஹனுமந்தையா அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். கல்விப் பொருட் காட்சியைத் திறந்து வைத்த திரு தேவராஜுலு அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இப்பொழுது கோவை ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி மாணவிகள் சில நிமிடங்கள் பஜனை பாடுவார்கள். அதற்குப் பிறகு பித்துக்குளி முருகதாஸ் அவர்களின் பஜனை இருக்கின்றது. ஆவலோடு நாம் அதை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றோம். அனைவருக்கும் இந்தக் கல்விப் பொருட்காட்சி திறப்பு விழாவில் கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் இந்தத் தலைவர்களுக்கும் பெரியோர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வித்தியாலயத்தின் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம் (கரகோஷம்)

Printed at
U. M. S. POWER PRESS.
COIMBATORE.